Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 5, No.2, 2024, (33-39)

# படிவம் 3 மாணவர்களின் பேச்சுத் திறனைக் ஜான் டூயி கோட்பாட்டின் வழி மேம்படுத்துதல் ஓர் ஆய்வு

Improve the speaking skills of Form 3 students through John Dewey's theory

**Vinusha A/P Anbalagan**

Fakulti Bahasa Dan Komunikasi
Universiti Pendidikan Sultan Idris, 35900 Tanjong Malim, Perak, Malaysia
Email: kaaminy@fbk.upsi.edu.my

**Published:** 20 October 2024

**To cite this article (APA):** Anbalagan, V. (2024). படிவம் 3 மாணவர்களின் பேச்சுத் திறனைக் ஜான் டூயி கோட்பாட்டின் வழி மேம்படுத்துதல் ஓர் ஆய்வு: Improve the speaking skills of Form 3 students through John Dewey's theory. *Journal of Valartamil*, *5*(2), 33-39. https://doi.org/10.37134/jvt.vol5.2.5.2024

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol5.2.5.2024

**சுருக்கம்:** உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்வதில் வாய்மொழித் திறன்களை வளர்க்க ஜான் டீவியின் கல்விக் கோட்பாட்டின் பயன்பாட்டை இந்த ஆய்வு ஆராய்கிறது. அனுபவ கற்றல், மாணவர்களை மையமாகக் கொண்ட அறிவுறுத்தல் மற்றும் ஆராய்ச்சி அடிப்படையிலான முறைகள் ஆகியவற்றில் டீவியின் முக்கியத்துவம் வாய்வழி தொடர்பு திறன்களை மேம்படுத்துவதற்கான மதிப்புமிக்க கட்டமைப்பை வழங்குகிறது. இரண்டு நோக்கங்களை அடைய இந்த ஆய்வு நடத்தப்பட்டது. வாய்மொழித் திறனில் படிவம் 3 மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைக் கண்டறிவதே முதல் நோக்கமாகும். ஜான் டீவியின் அனுபவ கற்றல் கோட்பாட்டின் மூலம் படிவம் 3 மாணவர்களின் வாய்மொழி திறன்களை மேம்படுத்துவது இரண்டாவது நோக்கமாகும். பினாங்கில் உள்ள பட்டர்வொர்த்தில் உள்ள பட்டர்வொர்த் கான்வென்ட் உயர்நிலைப் பள்ளியிலிருந்து 23 பெண் படிவம் 3 மற்றும் 4 ஆசிரியர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட அளவு மற்றும் தரமான தரவுகளுடன், கலவையான அணுகுமுறையைப் பயன்படுத்தி இந்த ஆராய்ச்சி நடத்தப்பட்டது. தரவைச் சேகரிக்கப் பயன்படுத்தப்படும் கருவிகளில் முன்-சோதனைகள், செயல்பாடுகளுக்குப் பிந்தைய சோதனைகள், நேர்காணல்கள் மற்றும் அவதானிப்புகள் ஆகியவை அடங்கும். ஆரம்ப சோதனைக்குப் பிறகு, மாணவர்களின் வாய்மொழித் திறனை மேம்படுத்துவதற்காக குறைந்தபட்ச ஜோடி பயிற்சி, பங்கு-விளையாட்டு, WH கேள்விகள் மற்றும் கற்றல் ட்ரையோஸ் A-B-C ஆகிய 4 செயல்பாடுகளை ஆராய்ச்சியாளர் மேற்கொண்டார். குறிப்பாக, இடைநிலைப் பள்ளி மாணவர்களுக்கான தமிழ் மொழிக் கல்வித் திட்டத்தின் பின்னணியில் டீவியின் கொள்கைகளை எவ்வாறு செயல்படுத்தலாம் மற்றும் மாணவர்களின் சரளமாக, தன்னம்பிக்கை

மற்றும் தகவல்தொடர்புகளில் விமர்சன சிந்தனையை மேம்படுத்தலாம் என்பதை இந்த ஆராய்ச்சி ஆராய்கிறது. மொத்தத்தில், மாணவர்களிடையே பேசும் திறனில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி இருப்பதை தேர்வு முடிவுகள் வலியுறுத்துகின்றன.

**முக்கிய வார்த்தைகள்:** ஜான் டீவி கல்வி, தரம், டீவியின் கொள்கைகள்

**Abstract:** This study explores the application of John Dewey's educational theory to develop the oral skills of high school students in learning Tamil. Dewey's emphasis on experiential learning, student-centered instruction, and research-based methods offers a valuable framework for improving oral communication abilities. This study was conducted to achieve two objectives. The first objective is to identify the problems faced by Form 3 students in oral skills. The second objective is to improve the oral skills of Form 3 students through John Dewey's Experiential Learning theory. This research was conducted using a mixed approach, with quantitative and qualitative data collected from 23 female Form 3 and 4 teachers from Butterworth Convent High School in Butterworth, Penang. Instruments used to collect data include pre-tests, post-activity tests, interviews, and observations. After the initial test, the researcher carried out 4 activities namely Minimal Pair Practice, Role-Play, WH Questioning, and Learning Trios A-B-C to improve the oral skills of the students. Specifically, this research investigates how Dewey's principles can be implemented in the context of a Tamil language education program for secondary school students and improve students' fluency, confidence, and critical thinking in communication. Overall, the test results emphasize that there is significant growth in speaking skills among students.

**Keywords:** John Dewey education, qualitative, Dewey's principles

## முன்னுரை

உலகலாவிய நிலையில் சுமார் 7000 மொழிகள் மக்களால் பேசப்பட்டிருந்தாலும், ஒரு மொழியின் சிறப்பை மிகத் துள்ளியமாக அறிந்து, ஆளுவதற்கும் மொழித்திறன்கள் அவசியம். இதனை மலேசியத் தமிழ்மொழிக் கலைத்திட்டமானது தமிழ்மொழி வாயிலாகப் பிறருடன் தங்களின் கருத்து அல்லது எண்ணங்களைப் பரிமாற்றம் செய்வதற்கும் தொடர்புக் கொள்ளவும் வெளிப்படுத்தும் நோக்கமாகக் கொண்டுள்ள அடிப்படை மொழித்திறனான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகியவற்றோடு செய்யுள் மற்றும் இலக்கணக் கூறுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்நான்கு அடிப்படை மொழித்திறன்களில் பேச்சுத்திறன் வகுப்பறைக் கற்றல் கற்பித்தலில் முதன்மையானது என்று வலியுறுத்தும் வண்ணமே தமிழ்மொழிக் கலைத்திட்டதில் பேச்சித்திறனையும் அதன் கூறுகளையும் முதன்மையாக இணைத்து விளக்கப்பட்டுள்ளன. அவை, செவிமடுத்தவற்றைக் கூறுவர்; அதற்கேற்ப துலங்குவர், கேள்விகள் கேட்பர், திறம்படப் பேசுவர், விவரித்துக் கூறுவர், கருத்துரைப்பர்; முடிவு கூறுவர். ஆகவே, மாணவர்கள் அதன் கூறுகளை நன்கு பொருளுணர்ந்து பேச்சுத்திறனைப் பெறுவதற்கு ஆசிரியரின் பங்கும் முக்கியமானது. இந்த 21-ஆம் நூற்றாண்டுக் காலக்கட்டத்தில், கல்வி அமைச்சு மாணவர் மையக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையிலே கல்வித் திட்டங்களை வரையறுத்துள்ளனர். ஆக, ஆசிரியர்கள் தகவல் தொழில்நுட்பங்கள், விளையாட்டு முறைகளுடன்

அழிவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் பல ஆய்வாளர்கள் அல்லது தத்துவஞானிகளின் கோட்பாடுகள் இணைத்துக் கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளலாம்.

## ஆய்வுப் பின்னணி

மலேசிய நாடு ஆங்கிலேயேரின் ஆட்சிக் காலத்திற்குப் பின்னர், 1960-ஆம் ஆண்டு அன்றையக் கல்வியமைச்சர் டத்தோ ஹாஜி அப்துல் ரசாக் பின் டத்தோ ஹூசேன் தலைமையில் கல்விக்குழுவால் வெளியிடப்பட்டு அமலாக்கப்பட்ட ரகுமான் தாலிப் அறிக்கை தமிழ்மொழியைப் பள்ளிகளில் பயிற்றுமொழியாகவும் ஏற்றுக்கொள்வதாக வலியுறுத்தியது. இருப்பினும், 1912-இல் ஆங்கிலேயர் செயற்படுத்திய (Labour Ordinance) தொழிலாளர் சட்டம், 7 முதல் 14 வயதுள்ள 10 பிள்ளைகள் இருப்பின், அத்தோட்ட நிர்வாகம் கட்டாயமாகப் பள்ளியை நிறுவ வேண்டும் என வலியுறுத்தித் தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சிக்குப் பெறும் உறுதுணையாக அமைத்தது. இதனால், 1920-இல் தொடங்கி தற்போது வரையிலும் இருநூறுக்கும் மேற்பட்டத் தமிழ்ப்பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன (Paramasivam Maruthai, 2023).

அன்று தொடங்கி, 21-ஆம் நூற்றாண்டில் உலக அளவிலான சவால்களை எதிர்கொள்ள, மலேசியக் கல்வி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 2013-2025 (KPM 2013) புத்தாக்கம் சிந்தனைத்திறன் கொண்ட மாணவர்களை உருவாக்குவது அரசாங்கத்தின் நோக்கமானது. அந்த வகையில் மலேசியக் கல்வி அமைச்சுத் தமிழ்மொழிக் கலைத்திட்டத்தில் மொழித்திறன்களைக் கற்றல் கற்பித்தலின் முக்கியக் கூறாக அறிமுகப்படுத்தியது. தொடக்கப்பள்ளி மற்றும் இடைநிலைப்பள்ளி மாணவர்களிடையே இத்திறன்களை மேம்படுத்தும் நோக்கிலேயே எந்தவொரு பாடத்திட்டங்களும் அமைய வேண்டும் என்பதற்காக மலேசியக் கல்வி அமைச்சு, கேட்டல்-பேச்சு, வாசிப்பு மற்றும் எழுத்துத்திறனுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது.

இக்காலக்கட்டத்தில் மாணவர்கள், உலக வளர்ச்சிக்கு ஏற்ப மாணவர்களும் கற்றல் கற்பித்தலில் புத்தாக்கங்கள் நிறைந்த பாடத்திட்டத்தையே விரும்புகின்றனர். தத்துவஞானி ஜான் டூயி என்பவர் பாரம்பரியக் கல்விக்கு எதிராக அமைந்திருப்பதை வலியுறுத்துவதற்காகச் செயல்வழிக் கற்றல் (Learning by doing) என்ற இக்கோட்பாட்டினை அறிமுகப்படுத்தியுள்ளார். இக்கோட்பாடு, ஒரு நடவடிக்கையில் உள்ள செயல்முறைகளையும் அதில் பெறுகின்ற அனுபவத்தைக் கொண்டும் அறிவை வளர்ப்பதாகும் (Mazuki Mohd Yasim, 2011). மாணவர்கள் ஈடுபடும் நடவடிக்கைகள் மூலம் எதிர்நோக்கும் சிக்கல்களின் தூண்டுகோலில் சிந்தனைத்திறன்களை நன்கு மெருகூட்டுவது மட்டுமின்றி சிக்கல்களைக் களையும் வல்லமையும் வாழ்நாள் கல்வியாகவும் உருவாகும் (Tu Shiwan & Zhukai, 2023). எனவே, இவ்வாய்வுப் படிவம் மூன்று மாணவர்களின் பேச்சுத்திறனை ஜான் டூயி கோட்பாட்டின் வழி மேம்படுத்த மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வுச் சிக்கல்**

மலேசியக் கல்வி அமைச்சகம் தர அடிப்படையிலான மதிப்பீடு ஆவணத்தில் (DSKP) பேச்சுத்திறன் கீழ் ஐந்து கற்றல் தரங்கள் மற்றும் மாணவர்களின் பேச்சுத்திறனை மதிப்பீடுச் செய்வதற்கான தர அடைவுநிலையையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இவை, மாணவர்களுக்குத் தாங்கும் வலிமையையும் தொடர்புக் கொள்ளும் திறனையும் மேம்படுத்துவதற்கு இந்த 21-ஆம் நூற்றாண்டுக் கலைத்திட்டம், தொடக்கப்பள்ளியில் தொடங்கி இடைநிலைப்பள்ளி வரையிலும் அமலாக்கப்படுத்தப்பட்டு வருகின்றது. இருப்பினும், பேச்சுத்திறனில் படிவம் 3 மாணவர்கள் பல சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். மாணவர்களுக்குப் பேச்சுத்திறனில் வல்லமைக் குன்றி இருப்பதினால் உச்சரிப்புப் பிழைகள், பிறமொழிக் கலப்புகள், சொற்களஞ்சியப் பிழை, திறம்படப் பேசுவதில் சிரமம் போன்ற சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

தொடக்கமாக, உச்சரிப்புப் பிழை மாணவர்களின் வாசிப்பிலிருந்து தொடங்குகின்றது. மாணவர்கள் சரியான உச்சரிப்புடன் வாசிக்கப் பழக்கத் தவறுவதல் குறில் நெடில் வேற்றுமைகள் அறியாது லகர, ழகர, ளகர வேறுபாடுகளையும் ரகர, றகர வேறுபாடுகளையும் ணகர, நகர, னகர வேறுபாடுகளையும் சரியாக உச்சரிக்காமல் அதனைப் பேச்சும் பொழுதும் பின்தொடர்கின்றனர். உச்சரிப்புப் பிழை ஒரு சொல்லின் பொருளையே மாற்றியமைக்கும் வல்லமைப்படைத்துள்ளது (Uma Allaghery, 2021). இதனால், கூற வரும் கருத்து அல்லது தகவல் பிறருக்குத் தவறாகச் சேருவதோடுக் கருத்துப் பரிமாற்றங்களில் சிக்கல்களை எதிர்நோக்குவார்கள்.

அடுத்து, சொற்களஞ்சியம் எனப்படுவது சொற்களை வரிசைப்படுத்தித் தருவது என்ற குறுகிய நோக்கில் அமையாமல் சொற்களின் வலைபோல் பின்னிக்கிடக்கும் பொருண்மை உறவுகளையும் சொல் உறவுகளையும் வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் அமைப்பாக்கம் செய்யப்பட்டிருக்கும் (Rajendran Sankaravelayuthan, 2018). சொற்களஞ்சியம், நிகண்டுகள், அகராதிகளின் துணைக் கொண்டு அமைக்கப்பட்டவையாக இருப்பினும் தமிழில் வழங்கிலுள்ள எல்லாச் சொற்களும், குறிப்பாகத் தற்காலத் தமிழக்குத் தேவையான சொற்கள் நிகண்டுகளில் இல்லாததால், அதன் குறைபாட்டைப் போக்கவே தமிழில் சொற்களஞ்சியம் உருவாக்கப்பட்டது. இச்சொற்களஞ்சியத்தைப் பற்றிய விழிப்புணர்வும் பயன்பாடும் மாணவர்களிடன் குறைவாகவே காணப்படுகின்றது. அவர்களுக்குப் பாடநூல்களில் உள்ள சொற்களஞ்சியங்களை மட்டுமே கற்றுக்கொள்கின்றனர். ஆசிரியர் ஒரு பனுவல் அல்லது ஒரு பாடம் தொடர்பான சொற்களஞ்சியங்களை எடுத்துரைக்கும் பொழுதும் அதன் பொருளை மாணவர்களிடமிருந்து பெறுவதற்கு முயலும் பொழுதும் மாணவர்கள் அதனைக் கற்றுக் கொள்கின்றனர் (Uma Allaghery, 2021). அதனைத் தவிர அவர்கள் சுயமாககக் கற்றுக் கொள்ள விரும்புவதில்லை. இதனால், மாணவர்கள் பேச்சில் சொற்களஞ்சியங்களைப் பயன்படுத்தும் பொழுது பிழைகள், பொருட்பிழைகள், தங்கள் கருத்துக்களைச் சரியாக வெளிப்படுத்தச் சிக்கல் ஏற்படுகின்றது.

**ஆய்வு நோக்கம்**

இந்த ஆய்வு இரண்டு நோக்கங்களை அடைவதைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. அவை;

1.4.1 படிவம் 3 மாணவர்களின் பேச்சுத்திறனில் ஏற்படும் சிக்கலைக் கண்டறிதல்.

1.4.2 படிவம் 3 மாணவர்களின் பேச்சுத்திறனில் ஏற்படும் சிக்கல்களை ஜான் டூயி கோட்பாட்டின் வழி மேம்படுத்துதல்.

**வினா**

வினா 1: படிவம் 3 மாணவர்களின் பேச்சுத்திறனில் எதிர்நோக்கும் க்கல்கள் யாவை?

இரண்டு ஆசிரியர்கள், மாணவர்களால் தங்கள் கருத்துக்களைத் தெளிவாகவும் தன்னம்பிக்கையுடனும் வெளிப்படுத்த இயலவில்லை. அவர்களால் சொற்களைச் சரியாக உச்சரிக்க முடிவதில்லை. பெரும்பாலான மாணவர்கள் ள,ல,ழ-கரச் மற்றும் ர,ற-கரச் சொற்களின் வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் அனைத்தையும் ஒரே ஓசையைப் போன்றே உச்சரிக்கின்றனர். ஓர் ஆசிரியர், சில இடைநிலை மற்றும் கடைநிலை மாணவர்களுக்கு அனைவரிடத்தில் பேசத் தயக்கமாக இருக்கின்றது. அவர்களுக்குத் தாழ்வு மனப்பான்மை அதிகமாகக் காணப்படுகின்றது. கருத்துகளை முறையாகவும் தக்கச் சான்றுகளுடன் கூற இயலுவதில்லை. மற்றொரு ஆசிரியர், சொல் வளம் மிகக் குறைவாக உள்ளது. மொழிக் கலப்புகளை மாணவர்கள் அதிகப்படியாகச் செய்கின்றனர். மேலும், பாடப்புத்தகத்தில் கற்றது மற்றும் வாழ்க்கையில் பயன்படுத்துவது இடையே இணைப்புச் செய்ய முடியாமை.

2. பேச்சுத்திறனில் காணப்படும் சிக்கலுக்கான காரணங்கள் யாவை?

மூன்று ஆசிரியர்கள், சில மாணவர்களுக்கு அதிகமான மக்கள் இருக்கும் இடங்களில் தனிச்சையாகப் பேசும் பொழுது நடுக்கத்துடனும் நெருக்கடி உணர்வுடனும் இருப்பர். இவர்களுக்குப் பிறரை நேரடியாக எதிர்கொள்ளவது கடினமான ஒன்றாகக் கருதுவார்கள். இதனால், குரல்களில் தடுமாற்றங்களும் பயமும் இருப்பதினால் கருத்துகளை வெளிபடுத்தச் சிரமப்படுக்கின்றனர். சில மாணவர்கள், தங்களால் சொற்றொடர் அல்லது வாக்கிய அமைப்புகளைச் சரியாகப் பயன்படுத்த இயலாது, ஒரு சொல்லைச் சரியாக உச்சரிக்க இயலாது என்ற எண்ணத்தைக் கொண்டுள்ளனர். இதனால், பிற மாணவர்கள் அல்லது ஆசிரியர் தாங்கள் தவறாகப் பதில்களைக் கூறினால் கேலி செய்வார்கள் என்றும் தப்பான மதிப்பீடு செய்வார்கள் என்றும் எண்ணுகின்றனர். மேலும், மாணவர்களுக்குச் சொல்லாற்றல் பற்றாக்குறையாக இருப்பதும் இதனின் முக்கியக் காரணியாகும். ஏனெனில், சரியான சொல் களஞ்சியத்தை உடனடியாகச் சிந்திக்க முடியாமல் தடுமாறுகின்றனர். பேச்சு வழக்கும் இரண்டாம் மொழித் தாக்கமும் உச்சரிப்புப் பிழைகளின் காரணமாக அமைகின்றது. பேச்சு வழக்கில் உள்ள

ஒலித்தொகைப்பு மற்றும் உச்சரிப்பு மாறுபாடுகள் மாணவர்களின் கற்றல் கற்பித்தலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பின்னர், பள்ளி, வீட்டுச் சூழல்களில் மலாய் மற்றும் ஆங்கில மொழிகளில் அதிகம் உரையாடும் மாணவர்கள் தமிழில் பேசும் பொழுது மொழிக் கலப்புகளைச் செய்கின்றனர். இம்மாணவர்கள் ஒரு வாக்கியத்தை முடிவுச் செய்வதற்குள் பல பிறமொழிகளை இணைத்தே பேசுகின்றனர். அம்மொழிகளின் 'slang' கொண்டு தமிழ்ச்சொற்களை உச்சரிக்கின்றனர். ஓர் ஆசிரியர், பெரும்பாலான மாணவர்கள் பிறமொழிகளில் விளிப்பதே பெறுமையாகக் கொள்கின்றனர். ஆதலால், அவர்களுக்குப் பேச்சும் போது ஒரு தமிழ்ச் சொற்களஞ்சியங்களைப் பயன்படுத்தாமல் பிறமொழிச் சொற்களில் விளிக்கின்றனர். ஏனென்றால், அவர்களுக்குத் தமிழைக் காட்டிலும் பிறமொழிச் சொற்களையும் சொல் களஞ்சியங்களையும் கண்டறிவது எளிமை எனக் கருதுகின்றனர்.

3. இச்சிக்கல்களைக் களைய நீங்கள் வகுப்பில் என்ன முயற்சிகளை மேற்கொண்டுள்ளீர்கள்?

இரண்டு ஆசிரியர்கள், விவாதம் மற்றும் குழு கலந்துரையாடல். மாணவர்கள் குழுக்களாகச் சேர்ந்து கருத்துகளைப் பகிரவும், சான்றுகளுடன் பேசவும் ஊக்குவிக்கப்படுகின்றனர். இது மாணவர்களின் தன்னம்பிக்கைகளை உயர்த்தி, கருத்துப் பரிமாற்றிகளில் முன்னேங்களையும் காட்டும். உச்சரிப்பு பயிற்சிகள். ஒலிவழி செயல்பாடுகள் (Phonetics-based Exercises) மூலம் ழ, ள, ல, ர, ற போன்ற ஒலிகளின் வேறுபாட்டை விளக்குதல் மற்றும் உச்சரிப்புப் பிழைகளைச் சரிச்செய்வதற்காக ஒலி ஒப்பீடு நிகழ்வுகள் (Audio Comparison Exercises) மேற்கொண்டுள்ளோம். மற்றொரு இரண்டு ஆசிரியர்கள், வாசிப்புப் பயிற்சிகள். மாணவர்களுக்கு வாசிப்பின் மூலம் சொற்களஞ்சியத்தை விருத்திச் செய்யும் வாய்ப்பு வழங்கியுள்ளோம்.

## முடிவு

இந்த ஆய்வின் முடிவின் மூலமாக ஆய்வாளரின் இரண்டு நோக்கங்களும் வெற்றிகரமாக அடைந்துள்ளதைக் காண முடிகின்றது. ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட 23 கொன்வன் பட்டவர்ட் இடைநிலைப்பள்ளி மாணவிகள், முன்னறித் தேர்வைக் காட்டிலும் பின்னறித் தேர்வில் பெற்ற அடைவுநிலை அதிகமாக இருப்பதே இதற்குத் தக்க சான்றாக அமைகின்றது. ஆகவே, இக்காலக்கட்டத்தில் ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கரும்பலகையே பயன்படுத்திப் போதிக்காமல் மாணவர் மையக் கல்வியையும் கோட்பாடுகளையும் கையாண்டு போதிக்கலாம். இதனால், மாணவர்கள் வகுப்பில் சலிப்புத் தட்டிவிடாமல் ஆர்வமாகவும் மகிழ்ச்சியாகவும் கற்றல் கற்பித்தலில் ஈடுப்பட ஆசிரியர் செயல்வழிக் கற்றலை மேற்கொள்ளலாம். இதன் மூலம், வகுப்பில் மாணவர்களின் ஈடுப்பாட்டையும் அதிகரிக்க முடியும். மாணவர்கள் முழு ஈடுப்பாட்டுடன் கற்றல் கற்பித்தலில் ஈடுப்படுவதோடுத் தங்களின் தன்னம்பிக்கையையும் மேம்படுத்திக் கொள்வர். இந்த ஆய்வு அதன் இலக்கான பேச்சுத்திறனின் சிக்கல்களைக் களைவதைச் சிறப்பாகச் செய்துள்ளது.

**REFERENCES**

Alfatihah, A., Ismayanti, D., Syam, A. T., & Santaria, R. (2022). Teaching speaking skills through project-based learning for the eighth graders of SMP Negeri 4 Palopo. IDEAS: Journal on English Language Teaching and Learning, Linguistics and Literature, 10(1), 152-165. p-ISSN: 2338-4778. e-ISSN: 2548-4192. https://doi.org/10.24256/ideas.v10i1.2555

Allaghery, U. (2018). மொரீசியசு தொடக்கநிலைப் பள்ளிகளில் பேச்சுத் திறனை அமல்படுத்துவதில் சிக்கலும் தீர்வும். Journal of Tamil Peraivu, 7(2), 40-47. ISSN: 2289-8379. https://doi.org/10.22452/JTP.vol7no2.4